### விண்வெளிப் பூங்கா – கப்பல் கட்டுமானம் என தூத்துக்குடிக்கு முதலீடுகள் அணி வகுக்கின்றன!

# தலைவர் கலைஞரின் தென் தமிழ்நாட்டின் கனவு நிறைவேறுகிறது!

## தூத்துக்குடி முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!



**தூத்துக்குடி, ஆக.5-**

**"விண்வெளிப் பூங்கா - கப்பல் கட்டுமானத் துறை மேம்பாட்டு பணிகளுக்கு முதலீடுகள் என தூத்துக்குடிக்கு முதலீடுகள் அணி வகுப்பதின் மூலம் தலைவர் கலைஞர் அவர்களின் தென் தமிழ் நாட்டின் கனவு நிறை வேறுகிறது" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடியில் நடை பெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.8.2025) தூத்துக்குடியில் நடை பெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை வருமாறு:-

தூத்துக்குடி முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்க வேண்டுமென்று நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று, இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருக்கக்கூடிய தொழில்துறைத் தலைவர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் அனைவரையும் அன்போடு வருக! வருக! வருக! என நான் வரவேற்கிறேன்!

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை முதன்மையாகக் கொண்டு நம்முடைய திராவிட மாடல் அரசு அதற்கான கட்டமைப்புகளை மிக சிறப்பான வகையில் உருவாக்கியிருக்கிறது. முதலீட்டாளர்கள் மாநாடுகளையும், முதலீட்டாளர்களுடனான சந்திப்புக்களையும் தொடர்ச்சியாக நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். சென்னை, கோவை, தூத்துக்குடி, துபாய், ஜப்பான், அமெரிக்கா அதுபோல ஸ்பையின், அமெரிக்கா என்று பல இடங்களில் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி, தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்து இருக்கிறோம்.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவுக்கு பாராட்டு!

2024ஆம் ஆண்டு சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்த, தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள் கடுமையாக உழைத்துகொண்டு இருக்கிறார். பல நாடுகளுக்குச் சென்று, வெளிநாட்டு முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து குவிக்கிறார். அதெல்லாம் தொழில் நிறுவனங்களாக உருவாக பாடுபடுகிறார்! தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறார். சொன்னதைச் செய்வோம் என்பதுதான் நம்முடைய அரசின் குறிக்கோள்! முதலமைச்சராக இருக்கக்கூடிய நான் என்னென்ன சொல்கின்றேனோ, அதையெல்லாம் தொழில்துறையில் செய்து கொண்டு வருகிறார் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

முத்து நகர் தூத்துக்குடியில் இரண்டாவது முறையாக இந்த நிகழ்வு நடைபெறுகிறது. துறைமுகமும், இயற்கை வளமும் திறமையான மனிதவளமும் நிறைந்திருக்கும் இந்த மாவட்டத்தை தொழில்வளர்ச்சி மிக்க மாவட்டமாக வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். தென் மாவட்டங்களில் அமைக்கப்படும் தொழிற் பூங்காக்களில், தொழிற்சாலைகளுக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுகிறது. உள்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, எப்போது வேண்டும் என்றாலும் உடனே தொழில் துவங்கலாம் என்ற தயார் நிலையில், இந்த தொழிற் பூங்காக்கள் தயாராக இருக்கிறது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (4.8.2025) தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 32,554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 49,845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தா.மோ. அன்பரசன், திருமதி பி. கீதாஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணண், மனோ தங்கராஜ், தொழில், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

நீர்த் தேவையை நிறைவு செய்ய, கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலையும் அமைக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் டைடல் பார்க் அமைக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் நியோ டைடல் பார்க் தொடங்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், டாடா எரிசக்தி மற்றும் விக்ரம் சோலார் எரிசக்தி ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விருதுநகரில் ஆயிரத்து 52 ஏக்கர் பரப்பளவில் PM மித்ரா பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. மொத்தத்தில், நம்முடைய தென் தமிழ்நாடு இதுவரை பார்க்காத தொழில் வளர்ச்சியை சாத்தியமாக்கி வருகிறோம்!

தென் தமிழ்நாடு பற்றி தலைவர் கலைஞர் கண்ட கனவு இன்றைக்கு நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. அதனால் தான் வின்ஃபாஸ்ட் தொழிற்சாலையின் தொடக்க விழாவில் நான் சொன்னேன் - இந்நாள் தென் மாவட்ட வளர்ச்சியில் ஒரு மிகப் பெரிய பொன்னாளாக அமைந்திருக்கிறது. **ஆட்சிக்கு வந்த உடனே, தமிழ்நாட்டை 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும் என்று டார்கெட் செட் செய்தோம்! அதை அடைய, பெருமளவில் முதலீடுகளை மேற்கொள்ள கூடிய உயர் தொழில் நுட்ப முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலைவாய்ப்புகளை அளிக்கும் முதலீடுகளையும் ஈர்க்க வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டு வருகிறோம்.**

### வட்டார மக்களின் வருமானம் அதிகரிக்கும்!

உயர் தொழில்நுட்பம் சார்ந்த செமிகண்டக்டர் உற்பத்தி, மின்வாகனங்கள் உற்பத்தி, சோலார் செல்கள், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, தகவல் தரவு மையங்கள் போன்ற அனைத்துத் துறைகளிலும் முன்னேறுவதற்கு அதில் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அதிக அளவிலான உயர் ஊதிய வேலைவாய்ப்புகள் கொண்ட இந்த துறைகள் மூலமாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், உற்பத்திச் சூழலையும் மேம்படுத்த முடியும். அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிற்சாலைகளை வளர்ச்சி குறைந்த மாவட்டங்களில் அமைப்பதால், அந்த வட்டாரத்து மக்களின் தனிநபர் வருமானம் அதிகரிக்கும்!

**2024ஆம் ஆண்டு சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்த, தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள் கடுமையாக உழைத்துகொண்டு இருக்கிறார். பல நாடுகளுக்குச் சென்று, வெளிநாட்டு முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து குவிக்கிறார். அதெல்லாம் தொழில் நிறுவனங்களாக உருவாக பாடுபடுகிறார்! தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறார். சொன்னதைச் செய்வோம் என்பதுதான் நம்முடைய அரசின் குறிக்கோள்! முதலமைச்சராக இருக்கக்கூடிய நான் என்னென்ன சொல்கின்றேனோ, அதையெல்லாம் தொழில்துறையில் செய்து கொண்டு வருகிறார் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.**



### தூத்துக்குடிக்கு முதலீடுகள் அணி வகுக்கின்றன!

அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களுமான வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்ற பரந்த நோக்கத்தோடு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறோம். தென் கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து வரக்கூடிய கப்பல்களுக்கு இந்தியாவின் நுழைவு வாயிலாக தூத்துக்குடி துறைமுகம் இருக்கிறது. அதனால்தான் முதலீடுகளும் தூத்துக்குடியை நோக்கி இன்றைக்கு அணிவகுத்து வந்து கொண்டிருக்கிறது.

தூத்துக்குடி பகுதியை "புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக" உருவாக்கும் வகையில், பல்வேறு பசுமை ஹைட்ரஜன், சோலார் செல் உள்ளிட்ட உற்பத்தி திட்டங்களை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது கூட வின்ஃபாஸ்ட் உற்பத்தியை தொடங்கி வைத்துவிட்டுதான், இந்த மாநாட்டிற்கு வந்து கலந்து கொண்டிருக்கிறேன். இந்த சிறப்பான நிகழ்ச்சியில், தூத்துக்குடி மற்றும் நெல்லையின் வளர்ச்சிக்காக 4 சிறப்பு அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

### 4 சிறப்பு அறிவிப்புகள்!

**முதல் அறிவிப்பு தூத்துக்குடி மாவட்டத்தில் 250 ஏக்கர் பரப்பளவில், ஒரு விண்வெளி பூங்கா ஸ்பேஸ் பார்க் அமைக்கப்படும். இந்த பூங்கா, விண்வெளி துறைக்குத் தேவையான கருவிகளின் உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கும்.**

**இரண்டாவது அறிவிப்பு கப்பல் கட்டுமானத் துறையை மேம்படுத்த நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, இதற்காக ஒரு பிரத்யேக நிறுவனம் வெகுவிரைவில் தொடங்கப் படும். அந்த நிறுவனம் மூலம், கப்பல் துறை தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளும் மேற்கொள் ளப்படும்.**

**மூன்றாவது அறிவிப்பு முருங்கை ஏற்றுமதி மற்றும் சாகுபடி கூட்டமைப்பிற்காக, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 5 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவினத்தில் ஒரு பொது வசதி மையம் நிறுவப்படும்.**

**நான்காவது அறிவிப்பு திருநெல்வேலி மாவட்டத்தில், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மண்டலப் பிரிவு அமைக்கப்படும்.**

### ரூ.10,30,348 கோடி முதலீடு, 32,28, 945 பேருக்கு வேலை!

நாங்கள் எடுத்து வரும் பெரு முயற்சிகளின் பலனாக, கடந்த நான்கு ஆண்டுகளில், 10 இலட்சத்து 30 ஆயிரத்து 348 கோடி ரூபாய் அளவிற்கு, உறுதி செய்யப்பட்ட முதலீடு, 32 இலட்சத்து 28 ஆயிரத்து 945 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில் 898 திட்டங்களை ஈர்த்திருக்கிறோம்.

இன்றைக்கு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், 32 ஆயிரத்து 554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 49 ஆயிரத்து 845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில், 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இது தவிர MSME துறை சார்பில், 244 கோடியே 45 இலட்சம் ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் ஆயிரத்து 56 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 19 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, 2 ஆயிரத்து 530 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3 ஆயிரத்து 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 5 திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

மேலும், டாட்டா பவர் சோலார், இன்ஃபினிக்ஸ் மற்றும் பினக்கிள் இன்ஃபோடெக் ஆகிய 3 நிறுவனங்களைச் சேர்ந்த பல்வேறு நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் இங்கே நான் வழங்கியிருக்கிறேன்.

இன்றைக்கு கையெழுத்தாகி இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மின்னணுவியல், பாதுகாப்பு, கப்பல் கட்டுமானம் மற்றும் தோல் அல்லாத காலணிகள் போன்ற பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

### திராவிட மாடல் அரசு ஒத்துழைப்பு நல்கும்!

வின்ஃபாஸ்ட் திட்டம் மூலமாக, மின் வாகனத் துறைக்கான மையமாக தூத்துக்குடி உருவெடுத்து வரும் அதே நேரத்தில், மின்னணுவியல் துறைக்கான மையமாகவும் தூத்துக்குடி மாறப் போவது உறுதி.

நம்முடைய திராவிட அரசு மீது மக்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை, தொழில் தொடங்கும் உங்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் நாங்கள் தொடர்ந்து நிச்சயமாக வழங்குவோம். நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற மாதிரி, நம்முடைய இளைஞர்களின் திறனை மேம்படுத்த அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் ஊக்கமளித்து பல்வேறு பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

"எந்த விதமான தொழிற்சாலை அமைத்தாலும், அதற்கான திறன்கொண்ட பணியாளர்கள் இங்கு இருக்கிறார்கள்" என்று தொழிலதிபர்கள் என்னிடம் அடிக்கடி சொல்கிறார்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தும் தமிழ்நாட்டில் இருக்கிறது! உங்களின் முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறேன்.

கடின உழைப்பால் இந்த வளர்ச்சியை, வெற்றியை நாம் ஈட்டியிருக்கிறோம். இது நீடிக்க வேண்டும், மேலும் பெருக வேண்டும். தம்பி டி.ஆர்.பி. ராஜா இந்த மாநாட்டிற்கு "Rising" என்று பெயர் வைத்துள்ளார். பொருத்தமான பெயர் தான். என்னைப் பொறுத்தவரையில், "Tamil Nadu Rising" மட்டுமல்ல, திராவிட மாடல் ஆட்சியில் "Tamil Nadu will keep on Rising" என்று சொல்லி, உங்கள் எல்லோருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயபூர்வமான நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தடுப்பணைகள் கட்டப்படவில்லையா?

# அன்புமணி விவரம் தெரியாமல் பேசுகிறார்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் காட்டமான பதில்!


**சென்னை, ஆக.5-**

**"தடுப்பணைகள் கட்டியது குறித்து அன்புமணி விவரம் தெரியாமல் பேசுவதா? என்று நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் காட்டமான பதிலடி கொடுத்துள்ளார்.**

பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த அன்புமணி அவர்களின் குற்றச்சாட்டிற்கு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் பதில் வருமாறு:-

பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த அன்புமணி அவர்கள் தன்னுடைய தந்தையான டாக்டர் அய்யா அவர்களை எதிர்த்து ரத கஜ துரக பதாதிகளுடன் தமிழகத்தில் திக் விஜயம் செய்ய புறப்பட்டிருக்கிறார். இதுகுறித்து கருத்து சொல்ல நமக்கு உரிமையில்லை; நாம் சொல்லப் போவதுமில்லை.

ஆனால், இந்த திக் விஜயத்தில் நேற்று வேலூருக்கு வந்து ஒரு பொதுக்கூட்டத்தில் போர்பிரகடனம் செய்திருக்கிறார். அவர் பேசுகிறபோது, என்மீது ஒரு சிறிய பாசமழையை பொழிந்துவிட்டு, அதே வேகத்தில் நான் அமைச்சராக இருந்து ஆற்றிய பணிகளை குறித்து விவரம் தெரியாமல் என்னுடைய அமைச்சர் பணியை குறித்து கொச்சைப் படுத்தி ஒரு குற்றச்சாட்டை என்மீது சுமத்தியிருக்கிறார். அதாவது, "இந்த மாவட்டத்தில் ஒரு அமைச்சர் இருக்கிறார். அவரை



நான் கேட்கிறேன். பாலாற்றில் ஒரு தடுப் பணையாவது கட்டியதுண்டா?" என்று முழக்கமிட்டிருக்கிறார்.

அன்புமணி அவர்கள் கொஞ்சம் விவரமானவர் என்று இதுநாள்வரை நினைத்திருந்தேன். ஆனால், வேலூரில் என் மீது அவர் சாட்டிய தவறான குற்றச்சாட்டிலிருந்து அவருக்கு கொஞ்ச நஞ்ச விவரம் கூட தெரியாது என்று நிரூபித்திருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த போது தான் ஆறுகளின் குறுக்கே தடுப் பணைகள் கட்டுகின்ற பணியை ஆரம்பித்தார்.

அதன் தொடர்ச்சியாக, நான் இந்த துறைக்கு அமைச்சராக, கலைஞர் முதல்வராக இருந்த காலகட்டத்திலும், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக இருக்கிற இந்த காலத்திலும்,

#### பாலாற்றில்

**இறையங்காடு, பொய்கை, சேண் பாக்கம், அரும்பருத்தி, திருப்பாற்கடல்**

#### கவுண்டன்யாநதியில்

**ஜங்காலப்பள்ளி, செதுக்கரை**

#### பொன்னையாற்றில்

**பரமசாத்து பொன்னை, குகையநல்லூர்**

#### பாம்பாற்றில்

**மட்றப்பள்ளி, ஜோன்றாம்பள்ளி**

#### கொசஸ்தலையாற்றில்

**கரியகூடல்**

#### அகரம் ஆற்றில்

**கோவிந்தப்பாடி**

#### மலட்டாற்றில்

**நரியம்பட்டு**

#### வெள்ளக்கல் கானாற்றில்

**பெரியாங்குப்பம்**

#### கன்னாற்றில்

**சின்னவேப்பம்பட்டு**

ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டியிருக்கிறேன்.

**இந்த ஆண்டு அம்பலூர், பாப்பனபள்ளி செங்குனிகுப்பம்,**

**அம்முண்டி, வெப்பாலை**

ஆகிய இடங்களில் தடுப்பணை பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே, அன்புமணி அவர்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள், இனிமேலாவது பேசுவதற்கு முன், யாராவது விவரம் தெரிந்தவர்களிடம் கேட்டு சரியான புள்ளிவிவரத்துடன் பேசுவது நல்லது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.